# மெட்ரோ ரயில்: தரம் உயர்த்தப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

சென்னை, ஜூன் 8: சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமையக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 75 கிலோ லிட்டர் திறன் வாய்ந்த இயற்கை வழி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தற்போது தரம் உயர்த்தப்படுகிறது.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. சூரியஒளி மூலம் மின்சாரம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பசுமைக் காடுகள் வரிசையில் மற்றொரு மைல்கல்லாக மின்சாரம் இல்லாமல் இயற்கை வழியில் இயங்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மெட்ரோ நிர்வாகம் அமைத்துள்ளது. கடந்த ஆண்டு ஜூன் 5-ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்தில் உள்ள மெட்ரோ ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தற்போது வெற்றிகரமாக ஓராண்டை நிறைவு செய்துள்ளது.

இது, தினசரி 10 கிலோ லிட்டர் கழிவுநீரை சுத்திகரிக்கும் திறன் வாய்ந்தது. இதன் மூலம், சிறிய அளவிலான தோட்டம் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. இந்த வெற்றியைத் தொடர்ந்து, பசுமை பாதுகாப்பின் அங்கமாக கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில் 10 கிலோ லிட்டர் திறன் வாய்ந்த மற்றொரு சுத்திகரிப்பு நிலையம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமையகவளாகத்தில் அமைந்துள்ள பணியாளர் குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 75 கிலோ லிட்டர் திறன் வாய்ந்த கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தினசரி 150 கிலோ லிட்டர் திறனுக்கு தரம் உயர்த்தப்படுகிறது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் செயல்படுத்தியுள்ள இந்த திட்டம், மிகக்குறைந்த செலவில் நிறைந்த பலனளிக்கும் திட்டமாகும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.